மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 6

ந.க.எண். 2001/C1/EMIS/SS/2023 நாள் :15.05.2023

பொருள் : பள்ளிக் கல்வி / EMIS மாணவர் விவரம் 2022-2023 ஆம் கல்வி ஆண்டை நிறைவு செய்த மாணவர்கள் - மாணவர்களுக்கு TC வழங்குதல் மற்றும் மற்ற வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களை அடுத்த வகுப்பிற்கு மாற்றம் செய்தல் (Transition) - 2023-2024 ஆம் கல்வியாண்டு புதிய மாணவர் சேர்க்கை விவரங்களை EMIS இணையத்தில் உள்ளீடு செய்து பதிவேற்றுதல் - அறிவுரைகள் வழங்குதல் - தொர்பாக.

-----

2023-2024 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர்கள் சேர்க்கை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. மேலும் மாணவர்கள் தேர்ச்சி பெற்ற அடுத்த வகுப்பிற்கு செல்ல உள்ளனர்.

2023-2024ஆம் கல்வியாண்டில் பயிலும் அனைத்து வகை பள்ளி மாணவர்களின் தேர்ச்சிசார் விவரங்களையும் (Promotion Module) மாற்றுச் சான்றிதழையும் (T.C) கல்வி மேலாண்மை தகவல் முறைமை (EMIS) வழியாக சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் **31.05.2023**-க்குள் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

2023-2024ஆம் கல்வியாண்டில் அனைத்து தொடக்க, நடுநிலை, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

- 2022-2023ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அனைத்து வகை பள்ளிகளில் முறையே 5ஆம் வகுப்பு (தொடக்கப் பள்ளிகள்), 8ஆம் வகுப்பு (நடுநிலைப் பள்ளிகள்) 10ஆம் வகுப்பு (உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்) 12ஆம் வகுப்பு (மேல்நிலைப் பள்ளிகள்) பயின்று நிறைவு

செய்த மாணவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் தயார் செய்து அவர்களின் பெயரை Common Poolக்கு மாறுதல் செய்து TC Generate செய்ய வேண்டும்.

- உதாரணமாக, நடுநிலைப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு மாணவர்களை Common Poolக்கு நகர்த்திய பின்னர் 7ஆம் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்பு, 6ஆம் வகுப்பிலிருந்து 7ஆம் வகுப்பு, 5ஆம் வகுப்பிலிருந்து 6ஆம் வகுப்பு, 4ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு, 3ஆம் வகுப்பிலிருந்து 4ஆம் வகுப்பு, 2ஆம் வகுப்பிலிருந்து 3ஆம் வகுப்பு, 1ஆம் வகுப்பிலிருந்து 2ஆம் வகுப்பு என்ற வரிசையில் ஒவ்வொரு வகுப்பில் பயின்ற மாணவர்களை அடுத்த உயர் வகுப்பிற்கு மாற்றம் (Transition) செய்திடல் வேண்டும்.

- மேலும் தொடக்கப் பள்ளிகளில் 5ஆம் வகுப்பு மாணவர்களை Common Poolக்கு நகர்த்திய பின்னர் 4ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு, 3ஆம் வகுப்பிலிருந்து 4ஆம் வகுப்பு, 2ஆம் வகுப்பிலிருந்து 3ஆம் வகுப்பு, 1ஆம் வகுப்பிலிருந்து 2ஆம் வகுப்பு என்ற வரிசையில் ஒவ்வொரு வகுப்பில் பயின்ற மாணவர்களை அடுத்த உயர் வகுப்பிற்கு மாற்றம் (Transition) செய்திடல் வேண்டும்.

- இவ்வாறு ஒவ்வொரு வகுப்பிலும் 2022-2023ஆம் கல்வியாண்டில் பள்ளியில் கல்வி பயின்ற அனைத்து மாணவர்களையும் அவர்கள் பயின்ற வகுப்பின் அடுத்த நிலைக்கு தேர்ச்சி அளித்து மாற்றம் செய்தல் போன்ற EMIS இணையதளத்தில் உள்ளீட்டுப் பணிகளை **31.05.2023**-ஆம் தேதிக்குள் நிறைவு செய்தல் வேண்டும்.

- 2023-2024ஆம் கல்வியாண்டில் 1 முதல் 8 வகுப்பு வரை புதிதாக சேர்க்கையாகியுள்ள மாணவர்கள் அனைவரின் விவரங்களையும் EMIS இணையதளத்தில் **13.06.2023**-ஆம் தேதிக்குள் உள்ளீடு செய்திடல் வேண்டும். வேறு பள்ளிகளில் பயின்று தற்போதைய பள்ளியில் சேர்க்கையான

மாணவர்களைப் பொருத்தவரை EMIS Unique ID எண்ணினைக் கொண்டு அவர்களின் விவரங்களை Common Pool-லிருந்து ஈர்த்திடல் வேண்டும்.

- 5ஆம் வகுப்பு (தொடக்கப் பள்ளிகள்) மற்றும் 8ஆம் வகுப்பு (நடுநிலைப் பள்ளிகள்) பயின்ற மாணவர்களுக்கு EMIS இணையதளத்திலிருந்து மாற்றுச் சான்றிதழ் (T.C) வழங்கப்பட்ட பின்னர் அம்மாணவர்கள் அடுத்த வகுப்பிற்கு பிற பள்ளிகளில் சேர்ந்துள்ளனரா என்பதை சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

- அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் மேற்குறிப்பிட்ட இதே வழிமுறைகளைப் பின்பற்றி பணிகளை குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடித்திட வேண்டும்.

- ஜூன் மாதம் முதல் வாரத்தில் பள்ளிகள் செயல்பட உள்ளதால் மாணவர்களின் வருகையை செயலியில் (Attendance APP) பதிவு செய்யப்பட வேண்டியுள்ளதாலும் மேலும் EMIS இணையதளத்தில் உள்ளீடு செய்து, பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவரங்களை கொண்டே வரும் நாட்களில் விலையில்லா நலத்திட்டங்கள் உட்பட அனைத்து செயல்பாடுகளுக்கும் தேவையான மாணவர் சேர்க்கை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-(RTE Act, 2009) படி உரிய மாணவர்களுக்கான சேர்க்கை கட்டணம் ஈட்டளிப்பு நிதி பெற EMIS இணையதளத்தில் மாணவர்களின் வகுப்பு மாற்றம் முறையாக (Transition) உரிய காலகெடுவிற்குள் தனியார் பள்ளிகள் செய்திடல் வேண்டும்.

எனவே, சேர்க்கையான புதிய மாணவர்கள் மற்றும் ஏற்கனவே பயின்று வரும் மாணவர்களின் விவரங்களை விடுதல்கள் மற்றும் குறைபாடுகள் எதுவும் இன்றி சரியாக பூர்த்தி செய்து EMIS இணையதளத்தில் உள்ளீடு செய்திட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குத் தேவையான அறிவுரைகளை மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலம் வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாநில திட்ட இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள்
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் } முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக

நகல்

1. ஆணையர், பள்ளி கல்வித்துறை, சென்னை - 60006
2. உறுப்பினர் செயலர், மாதிரிப் பள்ளிகள், சென்னை - 60006
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை - 60006
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை - 60006